1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது எதிர்த் தரப்பிலிருந்து ''goal'' போடுகிறீர்கள் ; போடுங்கள்.

9–45 மணி

திரு. வி. கே. சின்னசாமி : நான் அமைச்சர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது, அந்தத் தண்ணீரை எடுப்பதற்குக் காரணமே விவசாயிகள் பாதிக்கின்ற காரணத்தால் தான். எப்படியாவது விவசாயம் வளர வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருந்து கொண்டு இருக்கின்றோம். கீழ் பவானி பகுதியிலேயும் இதைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, சுறுசுறுப்பாகச் செயல் படக் கூடிய அமைச்சர் என்பதோடு மட்டுமல்லாமல், நீண்ட அனுபவம் வாய்ந்த அமைச்சர் என்ற காரணத்தினாலும், அவர் மத்தியிலும் வாதாடி இருக்கிறார், மாநிலத்திலேயும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் இதை நன்கு ஆய்வு செய்து, இதை அறவே ரத்து செய்வதோடு, இந்தத் தண்ணீர் எடுக்கின்ற விவசாயிகளை வீணாக அதிகாரிகள் தொந்திரவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் முன் வர வேண்டும் ; வருவாய்த் துறை அமைச்சரவர்களும் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதற்காக அவர் பெரியசாமி ஆக வேண்டிய அவசியமில்லை.

பெரியார் போக்குவரத்து கழகப் பணிமனை.

*1665 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் உள்ள பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பஸ்கள் நிற்பதற்கு எத்தனை ஏக்கர் நிலம், எவ்வளவு தொகைக்கு, எப்பொழுது வாங்கப்பட்டது ?

(ஆ) அந்த இடத்தை தற்பொழுது பயன்படுத்துகின்றார்களா ?

(இ) தனியார் இடம் பயன்படுத்தப்பட்டால் அதற்காக வாடகை பிரதி மாதம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) விருத்தாசலத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக்காக 0.89 ஏக்கர் நிலம் நில எடுப்பு அலுவல ரால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் அதாவது ரூ. 1,59,230.60-ல் 6—8—1981 தேதியில் வாங்கப்பட்டது. பின்னர், நில உரிமையாளர் தொடர்ந்த உயர் மதிப்பீடு வழக்கின் தீர்ப்பின்படி, மேலும் ரூ. 2,29,548 வழங்க ஆணையிடப் பட்டது. உயர்நீதி மன்றத்தில் செய்து கொண்ட மேல் முறை யீட்டில் உயர் நீதிமன்றம் ரூ. 2,00,000-ஐ உடனடியாக செலுத்த ஆணையிட்டதில் 17—9—1986-ல் அத்தொகை செலுத்தப் பட்டது. மீதமுள்ள தொகை உயர்நீதிமன்ற இறுதி ஆணையின் படி செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) ஆம்.

(இ) தனியார் நிலத்திற்கு கொடுக்கப்படும் வாடகை பிரதி மாதம் ரூ. 1,600.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தற்போது நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடம், அந்த நகரத்தையொட்டி மிக நெருக்கடி யான பகுதியிலே இருப்பதனாலே அதுவும் அது போதுமான வசதியாக இல்லாமல் அவ்வளவு குறுகிய இடத்திலே இருப்பத னாலே அந்த இடத்தைத் தவிர்த்து, வேறு நல்ல போக்கு வரத்திற்கு வசதியாக, எல்லா பஸ்களும் போய் வருவதற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கக் கூடிய வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திலே இந்த பஸ் நிறுத்தும் இடத்தை ஏற்பாடு செய்வதற்கு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு 1981-வது ஆண்டிலேயே நிறைவடைந்து விட்டது. நஷ்டயீடு கொடுக்கின்ற தொகையிலேதான் வேறு பாடு ஏற்பட்டு, நிலச் சொந்தக்காரர்கள், விருத்தாசலத்திலே இருக்கின்ற நீதிமன்றத்திலேயும், அதற்குப் பின்னாலே உயர்நீதி மன்றத்திலேயும், மேல் முறையீடுகள் செய்ததற்குப் பிறகு, கடைசியாக உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப்படி, அதற் குண்டான நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இறுதியாகச் செலுத்த வேண்டிய 29,548 ரூபாய் 20 பைசா மட்டுமே போக்குவரத்துக் கழகம் செலுத்த வேண்டும். ஆனால், உயர்நீதிமன்றம் ஒரு இலட்சம் செலுத்த வேண்டுமென்று ஆணை யிட்டிருக்கிறார்கள். இந்தத் தொகை அதிகமான அளவிலே இருக்கின்ற காரணத்தால் அந்த உத்தரவு மாற்றப்பட வேண்டு மென்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உயர்நீதி மன் றத்தைக் கேட்டிருக்கிறோம். ஆகவே, கையகப்படுத்துவதற் கான எல்லா நடவடிக்கைகளும் முடிந்து விட்ட காரணத்தி னால், இந்த நில எடுப்பை நம்மாலே கைவிட முடியாது.

1990 ஏப்ரல் 21]

82 பேருந்துகள் தற்போது விருத்தாசலம் பணி மனையிலே யிருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடவசதிக் குறைவாக இருந்தால், தேவைப்பட்டால் நகரத்திற்கு அப் பாலேயும் கூடுதலாக இடம் வாங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கையகப்படுத்தப்பட்ட இடம் நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த இடத்திற்கு உரிமை யானவர் அவர் இல்லை. அது கோயிலுக்கு, ஒரு தர்ம ஸ்தாப னத்திற்கு உள்ள இடம். அது கூட தனிப்பட்ட முறையிலே வழக்கிலே இருக்கிறது. அந்த இடத்திலே நாம் இந்த பஸ் நிறுத்துவதற்கு இடத்தைப் பெறுவதை விட ஊருக்கு வெளிப் புறத்திலே, நகரத்திற்கு வெளிப் புறத்திலே நல்ல தகுதியான பெரிய இடத்தை வாங்கி அங்கே இந்த ஏற்பாட்டைச் செய் வதற்கு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு சம்பந்தமாக நஷ்டயீட்டோடு சேர்த்து வட்டி யும் செலுத்த வேண்டுமென்றுதான் நீதிமன்றம் உத்தரவிட்டு, 1,59,230 ரூபாய் என்று நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டது. கடைசியிலே அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, வட்டியெல்லாம் சேர்த்துச் செலுத்த வேண்டுமென்று, கடைசியாக 3,10,500 ரூபாய் என்கின்ற அளவிலே கொண்டு போய் நிறுத்தி, அதற்குண்டான நஷ்டயீட்டுத் தொகையும் கட்டப்பட்டாகி விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை யில் அந்த நில எடுப்பை விட முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசித்துதான் பதில் சொல்ல வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கம்பன் ரயில ராமேஸ்வரம் வரை விடுதல்.

***7443—டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கம்பன் ரயிலை ராமேஸ்வரம் வரை விட மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மானாமதுரை வரை செல்லும் கம்பன் இரயில் சென்னை- இராமேஸ்வரம் இரயிலைத் தொடர்ந்தே இயக்கப்பட்டு வருவ தால் கம்பன் இரயிலை இராமேஸ்வரம் வரை விட மத்திய அரசினைக் கோர அவசியமில்லையென கருதப்படுகிறது.